நிதியுதவி பெற, இதற்குண்டான செயல் திட்டம் இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம், இத்திட்டத்திற்காக சுமார் 6 இலட்சம் அமெரிக்க டாலர் நிதியுதவி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, மேலும் சென்னை நகரத்திலே குடியிருக்கிற மக்களுடைய வீட்டு வசதியைப் பெருக்குவதற்காகவும், தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிக்காகவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு மாதிரி நகரம் ஏற்படுத்த உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாதவரம் பகுதி அல்லது முகப்பேர் பகுதி அல்லது நொளம்பூர் பகுதியிலே ஒரு முன்மாதிரி கிராமத்தை மேலும் விரிவுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, வினா எண் *281*, தற்பொழுது எடுத்துக் கொள்ளப்படுகிறது. திரு. பி.வி. இராஜேந்திரன், இருக்கையில் இல்லை.

வினா எண் *289*, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

289–

திருப்பத்தூர் தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை அமைத்தல்.

***23653*–திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

திருப்பத்தூர் தொகுதியில் தீப்பெட்டித் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தீப்பெட்டித் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. எந்தவிதத் தொழில் வளமும் இல்லாத தொகுதி. மக்கள், விவசாயத்தையும் பீடித் தொழிலையும் நம்பி வாழ்கின்ற தொகுதி.

1994 ஏப்ரல் 18]

எங்கள் வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள 12 தொகுதிகளில், திருப்பத்தூர் தொகுதி எந்தத் தொழிற்சாலையும் இல்லாத தொகுதி. தொழிற் புரட்சி செய்துவரும் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், திருப்பத்தூர் தொகுதியிலே தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைத்துக் கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்குத் தாமாகவே முன்வருவார்களேயானால், கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கு தொழில் வணிக இயக்குநரகம் பரிசீலனை செய்து, நல்ல முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-25

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தீப்பெட்டிக்குத் தேவையான மூலப் பொருள்கள் திருப்பத்தூர் தொகுதியிலே நிறைய கிடைக்கின்றன. அதனால் தீப்பெட்டித் தொழிற்சாலையை அமைச்சரவர்கள் அமைத்துக் கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைப்பதற்கு முன்வருவார்களேயானால் அமைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 290, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

290–

தொகுப்பு வீடுகளுக்குப் பப்பாளி, முருங்கை மற்றும் தென்னங்கன்று வழங்குதல்.

***22537–டாக்டர் வெ. சரோஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ள காலனிகளில், ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு பப்பாளி மரம், ஒரு முருங்கை மரம் வழங்கவும், ஒவ்வொரு சத்துணவு மையத்திலும் ஒரு தென்னங்கன்றை துறையே நடவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?